### ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டம் சீர்குலைப்பு!

# ‘விபிஜி ராம் ஜி’ திட்டமும் செயல்படவில்லை!

புதுடெல்லி, ஏப்.27-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை (எம்என்ஆர்இஜிஏ) சீர்குலைத்த பிறகு ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட விபி ஜி ராம் ஜி (விக்சித் பாரத்உத்தரவாதம் மற்றும் ஆஜீவிகா இயக்கம் (கிராமின்)) திட்டம் இன்னும் செயல் படுத்தப்படாததால், வேலைவாய்ப்பு உறு தித்திட்ட தொழிலாளர்கள் ஒரு மாதமாக வேலை இழந்துள்ளனர்.

இத்திட்டம் குறித்து மாநில அரசுக்கோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளுக்கோ எந்த அதிகாரப்பூர்வ தகவலும் கிடைக்க வில்லை. அதற்கான நடைமுறைகள் குறித்தும் தெளிவு இல்லை. ஒன்றிய அரசின் உத்தரவு கிடைத்தா லும், அதை நடைமுறைப்படுத்த குறைந்தபட்சம் 6 மாதங்களாவது ஆகும். புதிய திட்டம் அமலுக்கு வரும் வரை, வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஒன்றிய அரசு முயற்சிக்கவில்லை. 2026-27 நிதியாண்டிற்கான வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் செயல் திட்டம் மற்றும் தொழிலாளர் பட்ஜெட்டிற்கு ஒன்றிய அரசு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை.

2024 ஏப்ரலில் 2,81,614 வேலை நாட்களை யும், 2025 ஏப்ரலில் 5,78,705 வேலை நாட்களையும் வழங்குமாறு கேரள அரசு சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளால் இதைச் செய்ய முடிந்துள்ளது. இருப்பி னும், இந்த ஆண்டு ஏப்ரல் 23 வரை 83,916 வேலை நாட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட வேலையின் தொடர்ச்சியாகும்.

விபிஜி ராம் ஜி திட்டம், வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் உண்மையான உள்ளடக்கத்தைச் சிதைப்பதாக ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டது. இத்திட்டத்தின் செல வில் 60 சதவிகிதத்தை ஒன்றிய அரசும், 40 சத விகிதத்தை மாநில அரசும் ஏற்கும். இதனால், மாநில அரசுக்கு ஆண்டுக்கு ரூ.1,600 கோடி இழப்பு ஏற்படும். முன்பு, இந்த விகிதம் 90:10 ஆக இருந்தத மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டம் சீர்குலைப்பு விபிஜி ராம் ஜி திட்டமும் சீர்குலைக்கப்பட்டுள்ளது.

### பா.ஜ.க.வில் இணைந்த ராகவ் சத்தா எம்.பி.க்கு -

# ‘இன்ஸ்டா’வில் 10 லட்சம் பேர் எதிர்ப்பு!

புது டெல்லி,ஏப்.27-

ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த மாநிலங்களவை எம்.பி ராகவ் சத்தா கடந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் 10 லட்சம் ஃபாலோயர்ஸை இழந்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஆறு மாநிலங்களவை எம்.பிக்களுடன் ராகவ் சத்தா ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த நிலையில், சமூக ஊடகத்தில் அவரின் செல்வாக்கு சரிந்துள்ளதாக தெரிகிறது. சில வாரங்களுக்கு முன்பு ஆம் ஆத்மி கட்சியின் ராஜ்யசபா துணைத் தலைவர் பதவியிலிருந்து ராகவ்சத்தாநீக்கப்பட்ட பிறகு, நேற்று அவர் பாஜகவில் இணைந்தார். அவரின் இந்த அரசியல் நிலைப்பாடு ஜென்ஸி தலைமுறையினரைக் கவரவில்லை என்று தெரிகிறது.

ராகவ் சத்தா பாஜகவில் இணைந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் சுமார் பத்து லட்சம் ஃபாலோயர்களை இழந்துள்ளார். வெள்ளிக்கிழமை அன்று, இன்ஸ்டாகிராமில் ராகவ் சத்தாவிற்கு 1.46 கோடி ஃபாலோயர்கள் இருந்தனர். சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு, அவரது ஃபாலோயர்களின் எண்ணிக்கை 1.35 கோடியாகக் குறைந்தது.

ராகவ் சத்தாவுக்கு எதிராக இன்ஸ்டாகிராமில் ‘பின்தொடர்வதை நிறுத்து’ என ஜென் ஸி தலைமுறையினர் மேற்கொண்ட பிரச்சாரம், 24 மணி நேரத்தில் அவரின் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை 10 லட்சம் குறைய வழி வகுத்துள்ளது என்று என்சிபி (எஸ்பி) செய்தித் தொடர்பாளர் அனிஷ் கவாண்டே ட்வீட் செய்துள்ளார். “இணையம் ஒரே இரவில் உங்களை ஒரு கதாநாயகனாக மாற்ற முடியும். அதே இணையம் ஒரே இரவில் உங்களை பூஜ்ஜியத்திற்கும் கொண்டு செல்ல முடியும்” என்று அவர் கூறினார்.

“unfollowRaghavChadha” என்ற ஹேஷ்டேக் சமூக ஊடகங்கள் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாஜகவை விமர்சிக்கும் தனது பழைய பதிவுகளை ராகவ் சத்தா நீக்கி விட்டதாகவும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் -

# பனகல் பூங்கா ‘மெட்ரோ’ தண்டவாளப் பணிகள் ஜூலை மாதம் தொடங்கும்!

சென்னை, ஏப்.27-

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் முதல் பனகல் பூங்கா வரையிலான 2.9 கி.மீ தூரத்திற்கு தண்டவாளம் அமைக்கும் பணிகள் வரும் ஜூலை மாதம் தொடங்கப்பட உள்ளன.

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் நடைபெற்று வரும் மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளில், 4வது வழித்தடமான பூந்தமல்லி கலங்கரை விளக்கம் பாதையில் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

இதன் முக்கியப் பகுதியாக, கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் மற்றும் பனகல் பூங்காவை இணைக்கும் 2.9 கி.மீ தூரத்திற்கு, இருபுறமும் சேர்த்து மொத்தம் 5.8 கி.மீ நீளத்திற்கு தண்டவாளங்கள் அமைக்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின்படி, பூந்தமல்லியில் இருந்து உயர்மட்டப் பாதையாக வரும் மெட்ரோ ரயில், பனகல் பூங்காவில் தான் முதன் முதலில் சுரங்கப்பாதைக்குள் நுழைகிறது.

இதனால் இரண்டாம் கட்டத் திட்டத்தில் பயணிகள் பயன்படுத்தப்போகும் முதல் சுரங்கப்பாதை நிலையமாக பனகல் பூங்கா அமைய உள்ளது.

தண்டவாளம் அமைக்கும் பணிகளுடன் சேர்த்து, ரயில்களுக்கு மின்சாரம் வழங்கும் மேல்நிலை மின்சாரக் கம்பிகள் அமைக்கும் பணிகளும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன. தற்போது பூந்தமல்லி போரூர் வடபழனி இடையிலான உயர்மட்டப் பாதையை முதலில் பயன்பாட்டிற்குக் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, மார்ச் 2027க்குள் இந்தப் பாதையை பனகல் பூங்கா வரை நீட்டிக்க மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த வழித்தடம் செயல்பாட்டிற்கு வரும் போது தி.நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்கள் பெரும் பயனடைவார்கள்.

### ‘நீட்’ தேர்வு ஹால் டிக்கெட் இன்று வெளியீடு:

# தமிழ்நாட்டில் 2 லட்சம் பேர் எழுதுகிறார்கள்!

சென்னை, ஏப்.27-

எம்பிபிஎஸ், பல் மருத்துவம், சித்தா, ஆயுர் வேதா உள்ளிட்ட மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு ஹால் டிக்கெட் இன்று வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் எம்பிபிஎஸ், பல் மருத்துவம், சித்தா, ஆயுர் வேதா மருத்துவ படிப்பு களில் சேர்வதற்கு நீட் தேர்வு நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறக்கூடிய மாணவமாணவிகள் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மிகக் குறைந்த கட்டணத்தில் படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. இதனால் நாடு முழுவதும் நீட் தேர்வு எழுதுவதற்கு மாணவ - மாணவிகள் தயாராகி வருகிறார்கள்.

எம்பிபிஎஸ், மருத்துவ படிப்பை தனியார் மருத்துவக் கல்லூரியில் படிப்பதற்கு சுமார் 2 கோடி ரூபாய் வரை செலவிடும் நிலை உள்ளது. ஆனால் அரசு மருத்துவக் கல்லூரிகளில் வெறும் 25 ஆயிரம் மட்டுமே ஆண்டுக்கு கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வில் எடுக்கப்படும் மதிப்பெண் அடிப்படையிலேயே கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்கப்படுகிறது. எனவே ஒவ்வொரு ஆண்டும் நீட் தேர்வு எழுதுவதில் மாணவமாணவிகள் அதிகம் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இந்தாண்டுக்கான நீட் தேர்வு மே மாதம் 3ம் தேதி நடைபெறுகிறது. நாடு முழுவதும் இத்தேர்வினை 28 லட்சம் மாணவ மாணவிகள் எழுது கின்றனர்.

தமிழகத்தில் இத்தேர்வை சுமார் 2 லட்சம் பேர் எழுத உள்ளனர். தேர்வு எழுதுவதற்கான ஹால் டிக்கெட்(அனுமதி சீட்டு) இன்று (28.04.2026) வெளியிடப்படுகிறது. neet.nta.nic.in இணையதளத்தில் வெளியிடப்படும் நுழைவுச் சீட்டை மாணவர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நுழைவுச்சீட்டில் தேர்வர்களின் பெயர், மையத்தின் முழு முகவரி போன்ற விவரங்கள் இடம் பெறும். நீட் தேர்வு 3 மணி நேரம் நடைபெறுகிறது. பிற்பகல் 2 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை இத்தேர்வு நடக்கிறது. தேர்வுக்கான ஏற்பாடுகளை தேசிய தேர்வு முகமை செய்து வருகிறது.

சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு மாணவர்கள் சிரமம் இல்லாமல் எழுதுவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தேர்வு மையம் எந்தப் பகுதியில் அமைகிறது என்று தெரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு மாணவர்கள் மையங்களுக்கு முன்னரே செல்வதற்கு திட்டமிட வேண்டி உள்ளது. அதனால் தாங்கள் வசிக்கும் பகுதியில் இருந்து சிலருக்கு மையங்கள் தூரமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

எனவே நுழைவுச்சீட்டு இன்று வெளியிடப்பட்ட பிறகு தான் தங்களுக்கு எந்த மையங்கள் எவ்வளவு தூரம் என்ற தகவலை அறிந்து கொள்ள முடியும். அதற்கேற்றவாறு தேர்வு மையங்களுக்கு முன் கூட்டியே செல்ல திட்டமிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

### மீன்பிடி தடைக்காலத்தைப் பயன்படுத்தி — நாகை மாவட்டத்தில்

# ஆயிரக்கணக்கான விசைப் படகுகள், வலைகள் சீரமைப்பு!

## மீனவர்கள் தீவிரம்!

நாகை, ஏப்.27-

தமிழ்நாட்டில் கடந்த 14.4.2026 நள்ளிரவு முதல் மீன் பிடி தடைக்காலம் அமலுக்கு வந்துள்ளது. அதேசமயம் குறிப்பிட்ட எல்லை வரை பைபர் படகுகள் கடலுக்கு சென்று மீன் பிடிக்க மீன்வளத் துறை அனுமதி அளித்துள்ளது. தடை காலத்தால் மாநிலம் முழுவதும் 10 லட்சம் மீனவர்கள் வேலையிழந்துள்ளனர்.

நாகை மாவட்டத்தில் 1,000 விசைப்படகுகள், தஞ்சையில் 150 விசைப்படகுகள், புதுக்கோட்டையில் 350 விசைப்படகுகள், மயிலாடுதுறையில் 250 விசைப்படகுகள், காரைக்காலில் 200 விசைப்படகுகள் கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. டெல்டாவில் சுமார் 1.50 லட்சம் மீனவர்கள், 10 இலட்சம் மீன்பிடி சார்ந்த தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். இதனால் டெல்டாவில் தினம்தோறும் ரூ.500 கோடி வர்த்தகம் பாதிக்கப்பட்டு வருகிறது.

பொதுவாகவே தடைக்காலத்தைப் பயன்படுத்தி நாகை மீனவர்கள் தங்களது விசைப்படகுகளையும், வலைகளையும் சீரமைப்பது வழக்கம். படகுகளுக்கு வர்ணம் தீட்டுதல், இன்ஜினை பழுது பார்த்தல், வலைகளை சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு சீரமைப்பு பணிகளில் மீனவர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து நாகை மாவட்ட மீனவர்கள் கூறுகையில், “விசைப்படகுகளை சீரமைக்க ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை செலவாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மீனவர்கள் வலையில் அதிக அளவிலான மீன்கள் சிக்கும். இப்போது போதிய மீன்கள் சிக்குவதில்லை.

வானிலை மாற்றம் காரணமாக பல நாட்கள் வீடுகளில் முடங்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் எங்களது குடும்ப வாழ்வாதாரத்தை காப்பதற்கே சிரமப்பட்டு வருகிறோம். இலட்சக்கணக்கில் செலவு செய்து விசைப்படகுகளை சீரமைப்பது சிரமம். எனவே விசைப்படகுகளை சீரமைக்க தமிழக அரசு வங்கி கடன் வழங்க வேண்டும். டீசலை ஜிஎஸ்டி உச்ச வரம்புக்குள் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டும். மீன் பிடி தடைக்கால நிவாரணத்தை ரூ.6 ஆயிரத்தில் இருந்து ரூ.8 ஆயிரமாக மாநில அரசு உயர்த்தியுள்ளது. இந்த தொகையை மேலும் உயர்த்தி வழங்க வேண்டும்” என்றனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக சிறுபான்மையினர் நலக்குழு துணை அமைப்பாளர் ஆலந்தூர் தீபக்கின் மனைவி ஷீபா (வயது 33) உடல் நலக் குறைவு காரணமாக நேற்று இயற்கை எய்தினார். அன்னாரின் உடலுக்கு ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் பா.குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

# மியான்மரில் மீண்டும் நிலநடுக்கம்!

நேபிடா, ஜன.27–

மியான்மர் நாட்டில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 28ந்தேதி ரிக்டர் 7.7 மற்றும் ரிக்டர் 6.4 அளவில் அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதனால் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் சுமார் 3,700 பேர் உயிரிழந்ததாகவும், 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் அந் நாட்டு அரசு தெரிவித்தது....

இதனை தொடர்ந்து மியான்மரில் அவ்வப்போது சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன....

அந்த வகையில், நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் (இந்திய நேரப்படி)... ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்திருந்தது....


இந்த நிலையில், மியான்மரில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 2.57 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.2 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது....

90 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 24.113 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 94.550 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த சக்திவாய்ந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை....

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.எம்.தைலப்பன்

**ஏப்ரல் 27 (2015)**



இளமைக்காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு புலவன்காடு கிளைக் கழகச் செயலாளர், ஒரத்தநாடு வட்டக் கழகச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புலவன்காடு ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும், 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஒரத்தநாடு தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்று சிறப்பாக மக்கள் பணியாற்றி தொகுதி வாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

விலைவாசி உயர்வு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் போராட்டம் உள்ளிட்ட தலைமை அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது இறுதி காலம் வரை எளிமையாக குடிசை வீட்டில் வாழ்ந்து வந்த இவர் மகளின் திருமண நிகழ்வு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் அவரது குடிசைக்கே நேரில் சென்று விசாரித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரியலூர் பொன். பக்கிரி

**ஏப்ரல் 27 (2015)**



அரியலூர் பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

1977ஆம் ஆண்டு முதல் ஏழு முறை அரியலூர் நகரச் செயலாளராகவும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1996–ல் அரியலூர் பேரூராட்சி மன்றத் தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.